# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>மின்இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்கு லஞ்சம் பெற்ற உதவி மின் பொறியாளர் கைது</u>

J.செல்வகுமார் (வயது 49), த/பெ ஜெயபால், நெ.56A, மாரியம்மன் கோயில் தெரு, கம்மியம்பேட்டை, கடலூர் மாநகராட்சி என்பவர் 04.01.2023 ஆம் தேதி கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனு ஒன்று கொடுத்தார். அந்த புகார்மனுவில் தான் எலக்ட்ரிக்கல் காண்ட்ராக்ட் வேலை செய்யும் இரண்டு கடைகள் மற்றும் இரண்டு வீடுகளுக்கு, உரிமையாளர் பெயர் மாற்றம் செய்துதரக்கோரி ஆன்லைனில் கட்டணம் செலுத்தியதாகவும், கட்டணம் செலுத்திய இரசீது மற்றும் விண்ணப்பம் ஆகியவற்றை சேர்த்து திருப்பாபுலியூர் உதவி மின் பொறியாளர் சசிகுமார் அவர்களை சந்தித்து மின் இணைப்பு பெயர் மாற்றம் தொடர்பாக கேட்டதாகவும், அப்போது அவர், ஒரு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.2500/- வீதம் நான்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்கு மொத்தம் ரூ.10000/- கேட்டார். பின்னர் வாதியின் கோரிக்கைக்கேற்ப ஒரு மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கு ரூ.2000/- என நான்கிற்கு ரூ.8000/- என குறைத்துக்கொண்டார். புகார்தாருக்கு லஞ்சம் கொடுத்து மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய விருப்பம் இல்லாததால், 04.01.2023 கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் திருப்பாபுலியூர் உதவி மின் பொறியாளர் சசிக்குமார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் மனு கொடுத்துக்கொண்டார். அவரது புகார்மனு மீது கடலூர் ஊ.த.க. பிரிவு கு.எண்.1/2023 பிரிவு, 7 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 படி வழக்கு பதிவு செய்து 05.01.2023 ஆம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொண்டு உதவி மின் பொறியாளர் சசிக்குமார் வாதியிடம் லஞ்சம் வாங்கியபோது, மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சசிக்குமாரை கையும் களவுமாக பிடித்து உதவி மின் பொறியாளர் அலுவலத்தில் விசாரணை செய்து அவரை கைது செய்தனர். மேலும், கைது செய்யப்பட்ட உதவி மின் பொறியாளரை கடலூர் கண்காணிப்பு மின் பொறியாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று வழக்கு சம்மந்தமாக கண்காணிப்பு மின் பொறியாளரிடம் விசாரணை மேற்கொண்டு முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.